**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 34/2008 Date:15.10.2025**

**(DW1)- லட்சுமி**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. அசல் வழக்கு எண் 34/2008 வழக்கு எனது அம்மா மட்டும் பிரதிவாதியாக எத்தனை வருடம் வழக்காடியிருப்பார்கள் என்றால் நான்கு வருடம் வழக்கு நடத்தியிருப்பார்கள். மேற்படி அந்த 4 வருடமும் எனது அம்மா வழக்கு நடத்த உதவியது நானா அல்லது சகோதரரா என்றால் எனது அம்மாவே வழக்கு நடத்தி விட்டார், யாரும் உதவவில்லை. எனது அம்மா உயிருடன் இருந்த காலக்கட்டத்தில் எந்த இடத்திலாவது ஏதாவது மனுக்கள் கொடுத்துள்ளேனா என்றால் எனது அம்மா உயிருடன் இருந்த காலம் வரை எனது அம்மா தான் வழக்கை நடத்தினார்.

2. மேற்படி காலக்கட்டத்தில் எனது அம்மா ஏதேனும் அலுவலகத்திற்கு சென்று புகார் ஏதும் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் மனு கொடுத்துள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியும். மேற்படி மனுக்களை கொடுக்கும் போது எனது அம்மாவே சென்று கொடுத்தாரா அல்லது நானோ எனது சகோதரரோ உதவி செய்தோமா என்றால் எனது அம்மாவே சென்று கொடுத்தார். எனது அம்மாவிற்கு எழுதி கையெழுத்திட போதுமான படிப்பறிவு இல்லையென்றால் சரியல்ல, எனது அம்மா கைநாட்டு வைப்பார்.

3. எனது அம்மா பள்ளிக்கூடத்திற்கு சென்றுள்ளதாக என்னிடம் தெரிவித்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் வாதியின் கணவரான எனது அண்ணன் வாதிக்கு எழுதி வைத்த உயில் பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனக்கு வாதி இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரிய வந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் என் பெயரிலான உயில் தயாரிக்கப்பட்டது என்றால் 07.03.2008 ல் எனது அம்மா எழுதி வைத்திருந்தார்.

4. மேற்படி உயில் எனது அம்மா எழுதி வைத்திருந்த விவரம் எனக்கு எப்படி தெரிய வந்தது என்றால் எனது அம்மா இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு என்னிடமும் எனது சகோதரிடமும் தெரிவித்தார். எனது சகோதரர் மேற்படி என் பெயரிலுள்ள உயிலை வாங்கி பார்த்தார்களா என்றால் இல்லை, அவர் வெளிநாட்டிலிருந்தார். இன்று வரை மேற்படி உயிலை எனது சகோதரர்கள் படித்து பார்க்கவில்லையா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எங்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் குளச்சல் காவல்நிலையத்திலும், மாவட்ட கண்காணிப்பாளரிடமும், சுசீலா மற்றும் அவரிடமிருந்து கிரயம் பெற்ற நபர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன்.

5. நான் மேற்படி புகார்களை எந்த அதிகாரியிடம் கொடுத்தேன் என்றால் S.I. சாலமோன் , Inspector சிவராஜ், அதற்கு முன்பு Inspector ராஜிடமும் கொடுத்தேன், அவர் ASP யிடம் கொடுக்க சொன்னார். ASP அலுவலகத்திற்கு எத்தனை முறை சென்றுள்ளேன் என்றால் விசாரணைக்கு அழைக்கும் போது சென்றுள்ளேன். இந்த வழக்கு தொடர்பாக என்னென்ன பரிகாரத்திற்காக மனு கொடுத்துள்ளேன் என்றால் எனது அம்மாவின் சொத்து என்னுடன் பிறந்த அனைவருக்கும் உரிமை உண்டு என்று கொடுத்துள்ளேன்.

6. மேற்படி உரிமைதாரர்களின் பெயர் மற்றும் விலாசங்களை குறிப்பிட்டு கொடுத்துள்ளேனா என்றால் குறிப்பிட்டு கொடுத்துள்ளேன். எனது அண்ணன் திருமணமான 6 மாதத்தில் இறந்து விட்ட படியால் வாதி விதவையானது குறித்து எனக்கு மன வருத்தமுண்டா என்றால் அனைவருக்கும் மன வருத்தமுண்டு. எனது அண்ணனுக்கு கேன்சர் நோய்க்கு எங்கு எவ்வளவு வருடமாக சிகிச்சை பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது அண்ணனுக்கு கேன்சர் நோய் இல்லை, திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவமனையில் ஆய்வு செய்து பார்த்த போதும் நோயில்லையென்று தெரிவித்தனர்.

7. எனது அண்ணனுக்கு திருமணமாகி 6 மாதத்தில் அவர்களுக்குள் எந்த வருத்தம் இருப்பதாக என்னிடம் தெரிவித்தாக்ள் என்றால் என்னிடம் தெரிவிக்கவில்லை. மேற்படி 6 மாத காலத்தில் வாதி மற்றும் எனது அண்ணனின் இன்ப துன்பங்களில் நான் கலந்து கொள்ளவில்லையென்றால்கலந்து கொள்ளவில்லை. எனது அண்ணன் உயிருடன்

இருந்த காலத்தில் அவரது மனைவிக்கு சொத்தை எழுதி கொடுத்தால் அவருக்கு பரி பூரணமாக சொத்து கிடைக்கும் என்ற விவரத்தை யாரும் தெரிவித்தார்களா என்றால் அது பற்றி தெரியாது.

8. தற்போது வழக்கு பட்டிகை சொத்து முழுவதும் யார் கைவசம் அனுபவத்தில் உள்ளது என்றால் 3ம் பிரதிவாதி சதீஷ் என்பவரின் அனுபவத்தில் உள்ளது. சதீஷ் அனுபவிப்பதற்கு முன்பு யார் மேற்படி சொத்தை அனுபவித்தார்கள் என்றால் சதீஷின் தந்தை முடியப்பன் என்பவர் அனுபவித்தார். வழக்கு பட்டிகை சொத்திற்கு என் பெயரில் பட்டாவோ தீர்வை ரசீதோ இல்லையன்றால் சரியல்ல, உள்ளது. மேற்படி பட்டாவையும் தீர்வை ரசீதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விசாரணையின் போது தாக்கல் செய்தனா அல்லது அதற்கு முன்பு தாக்கல் செய்தனா என்றால் விசாரணையின் போது தாக்கல் செய்தேன்.

9. சதீஷிற்கும் எனக்கும் காவல்நிலையத்தில் பிரச்சனை ஏதும் உண்டா என்றால் அவர் எங்களது சொத்தை பொறுத்து போலி பத்திரம் தயாரித்துள்ளார் என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம். யார் புகார் கொடுத்தார்கள் என்றால் எனது அம்மா உயிருடன் இருந்த காலத்தில் எனது அம்மாவும் பின்னர் நானும் புகார் கொடுத்தோம். வாதியின் பெயரிலுள்ள உயிலை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

10 . எனது அண்ணனுக்கு நிச்சயத்தார்த்தம் எந்த தேதியில் எங்கு வைத்து நடந்தது என்றால் நிச்சயத்தார்த்தம் நடைபெறவில்லை, திருமணம் மட்டுமே நடைபெற்றது. திருமணத்திற்கு எவ்வளவு நாட்கள் முன்பு கல்யாண பேச்சுவார்த்தை துவங்கினார்கள் என்றால் திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பேசினார்கள். மேற்படி திருமண பேச்சுவார்த்தை வரை எனது அண்ணன் பெயரில் சொத்து கிடையாது என்றால் சரியல்ல, எது அண்ணனுக்கு சொத்து வாங்கி வீடு கட்டிய பின்பு தான் திருமணம் நடைபெற்றது. அண்ணனின் வீட்டின் கிரக பிரவேசமும் திருமணமும் ஒரே தேதியில் நடைபெற்றதா என்றால் திருமணத்திற்கு முன்பே கிரக பிரவேசம் நடைபெற்றது.

11. மேற்படி கிரக பிரவேசத்திற்கு வாதியும் அவரது குடும்பத்தினரும் கலந்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்போது அவர்கள் வரவில்லை, அதன் பின்பு தான் திருமணம் நடைபெற்றது. எனது அண்ணனின் திருமண பேச்சுவார்த்தை மற்றும் திருமண நிகழ்வுகளை யார் நடத்தி வைத்தார்கள் என்றால் அருளானந்தன் என்பவர் நடத்தி வைத்தார். மேற்படி அருளானந்தன் எனது குடும்ப உறுப்பினரல்ல என்றால் சரிதான். மேற்படி அருளானந்தன் வாதியின் குடும்ப உறுப்பினர் என்றால் சரியல்ல. எனது அண்ணன்கள் வெளிநாட்டிலிருந்த காரணத்தினால் மேற்படி அருளானந்தன் வழிகாட்டலின் பேரில் சொத்துகளும் வாதியின் திருமணமும் நடைபெற்றது என்றால் அருளானந்தன் தலைமையில் தான் திருமணம் நடந்தது, ஆனால் சொத்து என் அம்மா முன் நின்று வாங்கினார்.

12. வாதியின் திருமணத்திற்கு 50 பவுன் நகை போட்டுள்ளார்களா என்றால் சரியல்ல, வரதட்சணை வாங்கவில்லை. வாதி திருமணத்தின் போது ஏதேனும் நகை அணிந்து வந்தாரா என்றால் அணிந்திருப்பார். வாதி தனது கணவரின் உயிரை காப்பாற்ற கடைசி காலக்கட்டம் வரை தனது நகைகளை விற்று தனது கணவரை காப்பாற்ற வேண்டி தீவிர சிகிச்சை கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல, அவ்வாறு எந்த நகையும் விற்கவில்லை. வாதியின் குடும்பம் எங்கள் குடும்பத்தை விட வசதி அதிகமுள்ள குடும்பம் என்றால் சரியல்ல.

13. எனது கடன் பிரச்சனைகளில் எனது அண்ணனான வாதியின் கணவர் உதவி செய்துள்ளாரா என்றால் உதவி செய்துள்ளார். அவருடைய உதவிக்கு நான் என்ன கைமாறு செய்துள்ளேன் என்றால் வாதியின் கணவரான எனது அண்ணன் வீடு கட்டும் போது நகைகளை அடகு வைத்து பணம் கொடுத்துள்ளேன். எனது திருமணத்திற்கு வாதியின் கணவர் என்ன செய்துள்ளார் என்றால் நகைகள் கொடுத்துள்ளார். எனது அண்ணனின் திருமணம் வரை அவருக்கு கடன் ஏதுமில்லையென்றால் சரியல்ல, வீடு கட்டும் போது கடன் இருந்தது, எங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் கடன் வாங்கியிருந்தார்.

14. வாதி குடும்பத்திடமிருந்து கடன் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமாஎ ன்றால் எல்லாரிடமும் வாங்கியுள்ளார். வழக்கு பட்டிகை சொத்து வாதிக்கு உரிமையுள்ள சொத்து என்றாலும் அதை அவர் முறையாக கிரயம் கொடுத்துள்ளார் என்றாலும்

அவர்கள் கடன் சுமை காரணமாக மேற்படி சொத்தை கிரயம் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. கிரயம் கொடுத்த பின்பும் கடன் குறையவில்லையென்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான் என் பெயரில் உயிலை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இந்த வழக்கை நடத்தாமல் வாதியை வாழ விடும் படி அறிவுறுத்தியும் நான் தான் இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல, எனது அண்ணன்கள் அனைவரின் அறிவுறுத்தலின் பேரில் தான் நடத்தி வருகிறேன். வழக்கு பட்டிகை சொத்தை வாங்குவதிலும் அதில் வீடு கட்டுவதிலும் வாதியின் கணவரின் சிகிச்சைக்கு தேவையான பணங்களை ஏற்பாடு செய்வதிலும் வாதியின் நகையும் பணமும் பெரும் பங்கு வகித்துள்ளது என்றால் சரியல்ல.

15. நான் வழக்கு பட்டிகை சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திலும் பொய்யான சங்கதிகளை கூறி எனது செல்வாக்கை பயன்படுத்தி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பெயரிலுள்ள உயில் எனது அம்மாவை கட்டாயப்படுத்தியும் நிர்பந்தப்படுத்தியும் என்னால் எழுதி வாங்கிய உயில் என்றால் சரியல்ல, எனது அம்மா இஷ்டப்பட்டு தான் எழுதி கொடுத்தார். எனது அம்மாவின் பெயரிலும் அவர் காலத்திற்கு பின்பும் இந்த வழக்கை நான் தான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு நியாயமானது என்றாலும் எனது வழக்கு பொய்யானது என்றாலும் சரியல்ல.

16. வழக்கு 34/2008 மற்றும் 195/2010 என்ற வழக்கை தவிர்த்து வேறு ஏதும் நடவடிக்கைகள் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் 70/2012 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி IA 70/2012 வழக்கில் மனுதாரர் யார் என்றால் நான் தான் மனுதாரர். மேற்படி IA 70/2012 வழக்கின் உத்தரவை யார் பெற்றார்கள் என்றால் எனது அம்மா பெற்றார். அசல் வழக்கு 34/2008 முதலில் எப்போது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் 08.07.2010 ல் தள்ளு படி செய்யப்பட்டது. மேற்படி வழக்கு தள்ளுபடியான சமயத்தில் மேற்படி வழக்கின் நடவடிக்கைகள் முடிந்து விட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல, அசல் வழக்கு எண் 195/2010 , நிலுவையில் இருந்தது.

17. மேற்படி IA 70/2012 எந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அசல் வழக்கு எண் 195/2010 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு 34/2008 ல்

பெற்ற உத்தரவின் மீது அல்லது அசல் வழக்கு எண் 195/2010 மீது IA 70/2012 தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அசல் வழக்கு 34/2008 ல் தாக்கல் செய்யப்பட்டது. IA 175 /2008 என்ற மனு எனது அம்மா உயிருடன் இருந்த காலத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார் . IA 70/2012 மனுவை நான் தான் தாக்கல் செய்தேன் என்றாலும் எனது அம்மா அப்போது உயிருடன் இல்லையென்றாலும் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தாக எனது அண்ணனின் பெயரிலுள்ள முழு சொத்தையும் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான், அதில் என் உடன் பிறந்த 8 நபர்களுக்கும் உரிமையுண்டு.

18. மேற்படி எனது அண்ணனுக்கு உரிமைப்பட்ட முழு சொத்தையும் குறித்து பரிகாரம் கேட்பதற்கு எனக்குஉரிமையில்லையென்றாலும் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமுமில்லையென்றால் சரியல்ல, எல்லாருக்கும் உரிமையுண்டு. IA 70/2012 மனு தாக்கல் செய்த போது எனக்கும் வாதிக்கும் வெவ்வேறு வழக்கறிஞர்கள் ஆஜராகியிருந்தார்கள் என்றால் சரிதான். வாதி இந்நீதிமன்றத்தில் எந்த உத்தரவையும் அவமதிக்கவில்லையென்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் உள்ள போது நீதிமன்ற உத்தரவை அவமதித்து போலி பத்திரத்தை தயார் செய்தார். அவ்வாறு அவமதிப்பு செய்திருந்தாலும் வாதி பகிரங்கமாக மன்னிப்பு கேட்க தயாராக உள்ளார் என்றால் பொய். IA 70/2012 நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**2**ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனது அண்ணன் இறந்த பின்பு 1ம் வாதிக்கும் எனது அம்மாவிற்குமிடையே பாக உடன் படிக்கை ஏற்பட்டதா என்றால் ஏற்படவில்லை. பாக உடன் படிக்கை ஏற்படுத்தாத நிலையில் எனது அம்மா முழு சொத்தை பொறுத்து எனது பெயரில் எழுதி வைக்க எந்த உரிமையுமில்லையென்றால் சரியல்ல, எனது அம்மாவிற்கு முழு சொத்தும் உரிமையுண்டு. எனது தாயாருக்கு சொத்து உரிமைப்படுத்தாத நிலையில் எனது தாயார் எழுதிய பிவாசாஆ. 20 ஆவணம் செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பிவாசாஆ. 20 அடிப்படையில் நான் பட்டிகை சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

2. எனது சகோதரர் கிருஷ்ணன் இறந்த பிறகு வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமான அசல் ஆவணங்களை நான் திருடி சென்று விட்டேன் என்றாலும் அது சம்பந்தமாக வாதி குளச்சல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல, புகார் ஏதும் கொடுக்கவில்லை. வாதி புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதனடிப்படையில் நான்

நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருடி சென்ற ஆவணங்களை தான் இந்த வழக்கில் எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. பிவாசாஆ. 4,5 ஆவணங்களை எனது அண்ணன் கிருஷ்ணன் இறந்த பிறகு போலியாக கையொப்பமிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 21,22 எனது வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களில்லையென்றாலும் அதில் நான் எனது அண்ணன் கிருஷ்ணனுக்கு பணம் கொடுத்ததாக துலங்கவில்லையென்றாலும் சரியல்ல. எனது அண்ணன் எதற்காக யாரிடம் பணம் வாங்கியுள்ளார் என்ற விவரம் பூமணிக்கு தான் தரியும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை கடந்த 15 ஆண்டுகளாக 3ம் பிரதிவாதியும் அவரது தந்தையும் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் என்னை அனுபவிக்க விடவில்லையென்றாலும் எனது அம்மா உயிருடன் இருந்த காலக்கட்டத்தில் என்னையும் எனது அம்மாவையும் வாதியும் 3ம் பிரதிவாதியும் அவரது தந்தையும் அடித்து வெளியேற்றி விட்டனர்.

4. நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் வாதி நியாயமான கிரயதாரர் என்றாலும் அவர் நியாயமான கிரய தொகையை கொடுத்து தான் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. தற்போது பட்டா பெயர் மாற்றம் பெற்று தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றாலும் எனக்கு மேற்படி சொத்தில் எந்த உரிமையுமில்லையென்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்